பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 06 திங்கட்கிழமை 19.04.2021 கதிர் 33

## அப்பலோவிலிருந்து மீண்டார் முரளிதரன்

### சிகிச்சையின் பின் விடுவிப்பு

சென்னை - அப்பலோ மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்ட இலங்கை அணியின் முன்னாள் கிறிக்கெட் வீரரும் கிறிக்கெட்பயிற்றுவிப்பாளருமான முத்தையா முரளிதரன் 'அஞ்ஜியோ'

2

### அரச படைகளின் தடைகளைத் தாண்டி

# தமிழர் தாயகத்தில் அன்னை பூபதியின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு



இலங்கையில் இருந்து இந்திய இராணுவத்தை வெளியேற்றக்கோரி உண்ணாவிரதப் போராட்டம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் அன்னை பூபதியின் 33ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று இடம்பெற்றன.

அரச படைகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் தடைகளுக்கு மத்தியில் அன்னை பூபதியை உணர்வுபூர்வமாக மக்கள் நினைவேந்தினர்.

இதன்படி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக வளாகத்தில் இன்று காலை நினைவஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

பூபதியின் உருவப்படத்திற்கு மலர் தூபி, மெழுகுவர்த்தி ஏற்றி மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

2

## யாழில் மேலும் இருவர் கொரோனாவால் சாவு

### இதுவரை 17 பேர் மரணம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் கொரோனா வைரஸ் தொற்றால் இருவர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 17ஆக உயர்வடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நல்லூர் - பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த 59 வயதுடைய ஒருவர் இன்று காலை

2

## அன்னை பூபதியின் நினைவு தினம் இன்று மட்டு. நகரில் கூட்டமைப்பால் அனுஷ்டிப்பு

### நீதிமன்றத் தடையோடு சென்று ஏமாந்த பொலிஸார்

வடக்கு - கிழக்கில் இந்திய இராணுவத்தை யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளும்படி வலியுறுத்தி சாகும் வரை உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த அன்னை பூபதியின் 33 ஆவது நினைவு தினம் இன்று (திங்கட்கிழமை) காலை மட்டக்களப்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில்

2



# மொட்டுக் கூட்டணியின் உள்பிளவைத் தீர்க்கும் இன்றைய கூட்ட முயற்சி பிசுபிசுத்துப் போனது

கொழும்பு, ஏப்.19

மொட்டுக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளிடையே ஏற்பட்ட குழப்பத்தைத் தணிக்கும் விதத்தில் இன்று முற்பகல் பிரதமர் தலைமையில் கூடிய கூட்டம் பிசுபிசுத்துப் போனது.

பல்வேறு சிறிய கட்சிகளையும் சேர்ந்த பல டசின் பிரதிநிதிகளை இந்தக் கூட்டத்துக்கு பஸில் ராஜபக்ஷ கூட்டி வந்தமையால், பிரதான கூட்டத்தில் பங்குபற்றாமல் விமல் வீரவன்ஸ, உதய கம்பன்பில்ல, வாசுதேவ நாணயக்கார போன்றோர் வெளியேறியமையால் கூட்டம் பிசுபிசுத்துப் போனது.

இன்றைய கூட்டத்துக்கு மொட்டுக் கூட்டணியின் பிரதான பத்துக் கட்சிகளின் தலைவர்கள் மட்டுமல்லாமல், சிறிய சிறிய கட்சிகள், அமைப்புகள், குழுக்களைச் சேர்ந்த பல டசின் கணக்கானோரும் அழைக்கப்பட்டிருந்தனர் என்பதை அறிந்த விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில்ல போன்றோர் அது குறித்து பிரதமரின் அலுவலக ஆளணி அதிகாரியான பிரதமரின் மகன்

2

### ஈஸ்டர் தாக்குதல் நினைவேந்தலையொட்டி

## கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கு புதன் விடுமுறை வழங்க தீர்மானம்



இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் இரண்டாவது ஆண்டு நிறைவு அனைத்து தேவாலயங்களிலும் சிறப்பு திருப்பலியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதையொட்டி அனைத்து கத்தோலிக்க பாடசாலைகளுக்கும்

2

## மக்களின் ஆணையை மீறினால் ராஜபக்ஷ அரசு கவிழ்வது உறுதி!

### அமைச்சர் விமல் திட்டவட்டம்



மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து - அந்த ஆணையை மீறாமல் ராஜபக்ஷ அரசு செயற்பட வேண்டும். இதுதான் இந்த அரசை நிறுவிய மக்களின் விருப்பம். எனவே, மக்கள் ஆணையை மீறிச் செயற்பட்டால் இந்த அரசு கவிழ்வதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

- இவ்வாறு ஆளும் ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய

2

# அரசு பிளவடைய இடமளியேன்!

### சதித்திட்டத்தை முறியடித்தே தீருவேன் என மஹிந்த சூளுரை



அரசுக்குள் நிலவும் கருத்து வேறுபாடுகளுக்கு முடிவு காணப்படும். மக்களின் அமோக ஆணையுடன் நிறுவப்பட்ட அரசு பிளவடைய இடமளியேன். அரசைக் கவிழ்க்கச் சிலரால் முன்னெடுக்கப்படும் சதிமுயற்சியை முறியடித்தே தீருவேன்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஆளும் ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டணி, ஒரு குடும்பமாக இயங்குகின்றது. குடும்பம் என்றால் அதற்குள் சில கருத்து வேறுபாடுகள் வரத்தான் செய்யும். அந்தக் கருத்து வேறுபாடுகளை வைத்து சிலர் அரசியல் ஆதாயம் தேட முயல்கின் றனர்.

ஶ்ரீலங்கா பொதுஜன

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## மொட்டுக் கூட்டணியின் உள்பிளவைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யோஷிதராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டு கேட்டனர்.

இதனையடுத்து, பஸில் ராஜபக்ஷ வின் வழிகாட்டலில் இவ்வாறு பலர் அழைக்கப்பட்டிருக்கின்றமையை யோஷித உறுதிப்படுத்தினர். இதன் பின்னர் நேரத்துடன் பிரதமரின் அலுவலக இல்லத்துக்கு வருகை தந்த விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார போன்றோர் பிரதமர் மஹிந்த ராபக்ஷவைச் சந்தித்துத் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துவிட்டு நேரத்துடன் நடையைக் கட்டினர்.

எனினும் அவர்களுடன் வந்த சு.க. தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் சிலர் இருந்து பிரதமருடன் பேசி விட்டுச் சென்றனர்.

ஆயினும், மொட்டுக் கட்சிக் கூட்டணியின் உள்வீட்டுக் குழப்பத்தைத் தீர்க்க இன்று எடுக்கப்பட்ட கூட்ட முயற்சி பஸில் தலைமையில் பல சிறு கட்சிகள், அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றிய காரணத்தால் பிசுபிசுத்துப் போனதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## மக்களின் ஆணையை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் ஆணையை மீற வேண்டாம் எனவும், வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் அரசிடம் நாம் கோரிக்கை விடுக்கின்றபோது அரசுக்குள் இருக்கும் ஒரு சிலர் எம்மைக் குழப்பவாதிகள் என்று சாடுகின்றனர்.

நாம் ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராகச் செயற்படவில்லை. அன்று தொடக்கம் இன்றுவரை ராஜபக்ஷ குடும்பத்தையும் அரசையும் பாதுகாத்தே வருகின்றோம். இந்த அரசை நிறுவியதில் எமக்குப் பெரும் பங்கு உண்டு.

மக்களின் ஆணைக்கு மாறாக, நாட்டைத் தாரைவார்க்கும் வகையில் தீர்மானங்களை அரசு எடுத்தால் அதை நாம் பகிரங்கமாகவே எதிர்ப்போம்.

பிரதமர் தலைமையில் இன்று நடைபெறும் அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான கூட்டத்தில் இதை நாம் தெளிவாக எடுத்துரைப்போம் - என்றார்.

## கத்தோலிக்கப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாளைமறுதினம் (ஏப்ரல் 21) புதன் கிழமை விடுமுறை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் இறந்தவர்களை நினைவுகூரும் வகையில்ஏப்ரல் 21ஆம்திகதிகாலை 8.45மணி முதல் அடுத்த 02 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு அவர் அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கிடையே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நினைவுகூரும் வகையில் நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ள சிறப்பு திருப்பலிகளின்போது, தேவாலயங்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

தேவாலயங்களுக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்குவது குறித்து ஏற்கனவே சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவுகளுக்குப் பொலிஸ் தலைமையகத்தால் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதுஎனப்பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

## அரசு பிளவடைய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னணியின் பலத்தை அறியாமல் சிலர் செயற்படுகின்றனர். எமது கூட்டணி அரசை எவராலும் பிளவுபடுத்த முடியாது - என்றார்.

அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையிலான கூட்டம்அலரி மாளிகையில் இன்று நடைபெறுகின்றது. இந்தக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலவரம், கூட்டுக் கட்சிகளுக்கிடையே நிலவும் முரண்பாடுகள் மற்றும் மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படுகின்றன.

குறிப்பாக, மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் சில சரத்துகள் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சி ஒரு நிலைப்பாட்டையும், ஏனைய கட்சிகள் வேறு நிலைப்பாட்டையும் கொண்டுள்ள காரணத்தால் அதனை அமைச்சரவையில் சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேநேரத்தில், கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம், மேதினக் கூட்டம் என்பன குறித்தும் இன்று இடம்பெறும் ஆளும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது அவதானம் செலுத்தப்படுகின்றது.

## அன்னை பூபதியின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனுஷ்டிக்கப்பட்டது.

பல்வேறு அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் மட்டக்களப்பு - கல்லடி, நாவலடியிலுள்ள சமாதியில் குறித்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நிகழ்வின் ஆரம்பத்தில் ஈகச்சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தியதுடன் அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டு.மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன், ஏறாவூர்ப்பற்று பிரதேசசபை தவிசாளர் சர்வானந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மா.நடராஜா, மட்டு. மாநகரசபை உறுப்பினர்களான ஜெயா, இராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் நிகழ்வு நிறைவடைந்த பின்னர் காத்தான்குடி பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவுடன் அப்பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

மேலும் நிகழ்வு நிறைவடைந்ததும் அங்கு வருகைதந்திருந்த அனைவரும் திரும்பிச் சென்றதன் காரணமாக பொலிஸார் அங்கிருந்து திரும்பிச்சென்றுள்ளனர்.

இந்திய இராணுவ அடக்குமுறை தொடர்பில் பொது கோரிக்கைகள் முன்வைத்து 1988.03.19 முதல் 1988.04.19 வரை மேற்கொண்ட தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் அன்னை பூபதி உயிர்நீத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழில் மேலும் இருவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நிமோனியாவால் பாதிக்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கல்வியங்காடு, வீரபத்திரர் ஆலயத்துக்கு அண்மையில் வசித்து வந்த மு.இராசலிங்கம் (வயது 77) என்ற வயோதிபர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார் என்று மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டார்.

கடந்த 03ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவருக்கு 05ஆம் திகதி கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதயப் பாதிப்பு தொடர்பான சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்துள்ளார் எனவும் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் மேலும் கூறினார்.

இருவரினது சடலங்களும் சுகாதார நடைமுறைகளின் கீழ் மின் தகனம் செய்யப்பட்டுள்ளன.

# காட்டு யானையின் தாக்குதலில் வவுனியாவில் குடும்பஸ்தர் சாவு



வவுனியா, ஏப். 19

காட்டு யானையின் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ள சம்பவம் வவுனியா செட்டிகுளம் கப்பாச்சி பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நேற்று மாலை காப்பாச்சி பகுதியில் உள்ள வயல்காணிக்கு இவர் காவலுக்குச் சென்றுள்ளார்.

இன்றைய தினம் வீடு திரும்பாத நிலையில் வயற் பகுதிக்கு சென்ற சிலர் அவர் சடலமாக இருப்பதை அவதானித்து, பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

சம்பவத்தில் சின்னசிப்பிகுளம் பகுதியைச் சேர்ந்த நலீம(வயது - 43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே பலியாகியுள்ளார்.

இவர் காட்டுயானை தாக்கியமையால் பலியாகியுள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## அப்பலோவிலிருந்து ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்யப்பட்டு இன்று மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து விளக்கம் அளித்து அப்பலோ மருத்துவமனை இன்று செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

49 வயதாகும் முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் முத்தையா முரளிதரன் இதய பரிசோதனைக்காக நேற்று அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு வெற்றிகரமாக அஞ்ஜியோ செய்யப்பட்டு, அஞ்ஜியோ பிளாஸ்ட் மூலம் ஸ்டென்ட் (நாளத்தை அகலப்படுத்தவும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கவும் இரத்த நாளத்தில் வைக்கப்படும் கண்ணி குழாய்) பொருத்தப்பட்டது.

மூத்த இருதய சிகிச்சை நிபுணர் செங்கூட்டுவேலன் முரளிதரனுக்கு சிகிச்சை அளித்தார். இந்த சிகிச்சையில் நலம் பெற்ற முத்தையா முரளிதரன் இன்று விடுவிக்கப்படுகிறார். இனி அவர் தனது வழக்கமான பணிளை தொடரலாம் எனவும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முத்தையா முரளிதரன் நேற்றைய தினம் தனது 49ஆவது பிறந்த தினத்தை கொண்டாடிய நிலையில் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த தகவல் கிரிக்கெட் ரசிகர்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர் தாயகத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, வவுனியாவில் கடந்த 1,520 நாள்களாக சுழற்சிமுறை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல்போனவர்களின் உறவினர்களாலும் அன்னை பூபதிக்கு அஞ்சலி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடி நாவலடியில் உள்ள, அன்னை பூபதியின் சமாதிக்கு அருகில் நினைவஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

இதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

1932 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி பிறந்த அன்னை பூபதி, இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தினரை வெளியேற்ற வலியுறுத்தி 1988 மார்ச் 19ஆம் திகதி மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வர் ஆலயத்திற்கு முன்பாக நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

அவரது கோரிக்கைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் போராட்டத்தை ஆரம்பித்து 31ஆவது நாளான 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி அவர் மரணித்தார்.

தேவை
கைதடியில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு
077 272 9651

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான விநியோகஸ்த நிலையத்துக்கு SALES REP தேவை.
மாதம் 45,000 சம்பாதிக்கலாம்.
தொடர்புகளுக்கு
0774737737/ 0773257747




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தியாக அன்னையின் நினைவு

அன்னை பூபதியம்மாவின் 33 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

தியாக தீபம் திலீபனுக்குப் பின்னர் காந்தி தேசத்துக்கு காந்தீயத்தை உரைத்த – உணர்த்திய – தமிழர் தேசத்தாய் அவள்.

பரந்த பாரத கண்டத்தின் தேசபிதா காந்தி மகான். அவர் வரித்து வழங்கிய அஹிம்சை நெறியை அவரின் தேசத்துக்கே போதித்த தமிழ்மாதா அன்னை பூபதி.

தியாகி திலீபன் போல ஓர் இயக்கத்தில் – ஒரு கட்சியில் – ஒரு அரசியல் கட்டமைப்பில் – முகிழ்ந்தவள் அல்லர் பூபதியம்மா.

பத்துப் பிள்ளைகளைச் சுமந்து பெற்று, சீராட்டி வளர்த்த குடும்பக் குத்துவிளக்கு அவள்.

ஒரு தமிழ்த் தாயின் இயல்பான தமிழர் தேசிய நேசம் அவளில் பிரகாசித்தது. அதன் வெளிப்பாடே இந்தத் தேசத்துக்காக – தன் மண்ணுக்காக – தன் இனத்துக்காக – நீதி, நியாயம் வேண்டித் தன்னையே ஆதியாக்கும் சத்தியப் போராட்டத்தை உண்மைத் தீவிரத்தோடு தொடர அவளைத் தூண்டியது எனலாம்.

மட்டக்களப்பு – அம்பாறை அன்னையார் முன்னணியின் செயற்பாட்டாளராக, தாய்க் குலத்தின் பிரதிநிதியாக தன் மக்களுக்காகத் துணிந்து களத்தில் குதித்த வீரத்தாய் அவள்.

அவள் ஆயுதம் ஏந்திப் போராடவில்லை; ஆயுதப் போராட்டத்தை வரித்து ஏற்றவளும் அல்லர்.

வீணான யுத்தத்தில், தேவையற்று உயிர்களைக் காவு கொடுத்து, உடைமைகளை சீரழித்து, மனித வாழ்வியலை நாசமாக்குவதற்கு எதிராகவே அவள் கொதித்து எழுந்தாள்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியப் படைகள் முன்னெடுத்த போராட்டத்தை உடனடியாக நிறுத்தக் கோரி, அந்தக் கோரிக்கைக்குப் பலம் சேர்க்கும் விதத்தில், பகிரங்கமாக அறிவித்து, உண்ணாநோன்புப் போராட்டத்தில் அவள் குதித்தாள்.

உடனடியாகப் போரை நிறுத்தி யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், புலிகளுடன் பேச்சு நடத்தி பிணக்கு இணக்கமாக தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அன்னையர் முன்னணி அடையாள உண்ணாவிரதப் போராட்டங்கள், சுழற்சி முறை உண்ணாநோன்பு போன்றவற்றை ஆரம்பத்தில் முன்னெடுத்தது.

தமிழ் மகளிரின் அடையாள உண்ணா நோன்புப் போராட்டம் தீவிரமுற்றமையை அடுத்து 1988 ஜனவரி 4 ஆம் திகதி திருமலையில் மகளிர் அணியினருடன் இந்திய அதிகாரிகள் பேச்சு நடத்தினர். ஆனால் தமிழ் அன்னையரின் கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டன.

அதன் பின்னர் 1988 பெப்ரவரி 10 ஆம் திகதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினர் கொழும்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர். அதுவும் வெற்றியளிக்கவில்லை.

பேச்சு முயற்சி முறிவடைந்தமையை அடுத்து தமிழ் மக்களின் நிலைப்பாட்டை உறுதியாக வலியுறுத்தி, இந்திய ஆளும் வர்க்கத்துக்கு அதனை உறைக்க உணர்த்துவதற்காக சாகும் வரை உண்ணாவிரதம் போராட்டம் நடத்தும் முடிவுக்கு அன்னையர் வந்தனர்.

உண்ணாநோன்பில் குதிப்பதற்கு பல தமிழ் அன்னையர் போட்டி போட்டனர்.

இறுதியில் குலுக்கல் முறையில் அன்னை அன்னம்மா டேவிட் என்ற பெண்மணி தெரிவாகி உண்ணாவிரதப் போரில் குதித்தார்.

மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் கோவிலில் 1988 பெப்ரவரி 16 ஆம் திகதி தமது போராட்டத்தை அவர் ஆரம்பித்தார். ஆனால் அன்னையின் போராட்டத் தீவிரம் பல மட்டங்களில் காத்திரமான அதிர்வலைகளை ஏற்படுத்தியமையை அடுத்து உண்ணாவிரத மேடையிலிருந்து படையினரால் அன்னம்மா டேவிட் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டார்.

இந்த நிலையில்தான் 1988 மார்ச் 19 ஆம் திகதி அன்னை பூபதியம்மாள் தனது போராட்டத்தை ஆரம்பித்தார். நீர் மட்டும் அருந்திசாகும் வரை உண்ணா நோன்பிருந்தார். *“சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமிருக்கிறேன். நான் சுயநினைவிழக்கும் கட்டத்தில் எனது கணவனோ அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்கக் கூடாது”* என்று எழுத்தில் உறுதி எடுத்த பின்னரே களத்தில் குதித்தார் அவர்.

அந்தப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும் இந்திய இராணுவம் கைது செய்து அச்சுறுத்தியது. ஆயினும் அன்னை பூபதி உறுதி குலையாமல் போராட்டத்தைத் தொடர்ந்து தியாகி திலீபன் வழியில் சாவை அணைத்தார். அன்னையின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாத உண்ணாநோன்பின் பின்னர் அணுஅணுவாய் செயலிழந்த அவரின் உணர்வலைகள் 1988 ஏப்ரல் 19 ஆம் திகதி மீளா உறக்கத்தில் மூழ்கின.

அந்தத் தேசப்பற்றாளரை சாகடித்து காந்தி தேசம் மற்றொரு வரலாற்றுத் தவறை இழைத்து அதனை தன் சரித்திரத்தில் கரும் புள்ளியாகப் பதிவு செய்து கொண்டது.

## ஆறுமுகன் தொண்டமானின் கனவு சிறிதுசிறிதாக நிறைவேறுகிறது – ஜீவன்



அமரர் ஆறுமுகன் தொண்டமானின் கனவு சிறிதுசிறிதாக நிறைவேறி வருகின்றது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலா ளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை சீ.எல்.எஃப். வளாகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றுக் கொடுத்து அமரர் ஆறுமுகன் தொண்டமானின் கனவை நிறைவேற்றியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனை யாரும் நிராகரிக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது என்று தெரிவித்துள்ள அவர், நுவரெலியா மாவட்டத்துக்கு உரித்தான வகையில் கொட்டகலையில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்படவுள்ளது எனவும் இதற்கான பணிகள் இன்னும் ஓரிரு ஆண்டுகளில் நிறைவடையும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, சிலர் கட்சியைக் காட்டிக் கொடுத்தனர் என்பதுடன் சிலர் தலைவர் தொண்டமானை முதுகில் குத்தினர் என்றும் தெரிவித்துள்ள ஜீவன் தொண்டமான், பழையவைகளை மறக்கக் கூடாது எனவும் வரலாறும் முக்கியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## நடிகர் விவேக்கின் நினைவாக இணுவில் இளைஞர்கள் மரநடுகை







மறைந்த தென்னிந்திய நடிகர் விவேக்குக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ்ப்பாணம் இணுவில் பகுதி இளைஞர்களால் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

ஒரு கோடி மரம் நடுகை செயற்திட்டத்தை நடிகர் விவேக் முன்னெடுத்து வந்திருந்தார். அந்நிலையில், கடந்த சனிக்கிழமை அவர் காலமானதைத் தொடர்ந்து அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பலர் மரநடுகை செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் வரதராஜா தனகோபியின் ஏற்பாட்டில் இணுவில் இளைஞர்கள் மர நடுகையில் ஈடுபட்டனர்.

அதேவேளை அமைப்பொன்றினை உருவாக்கி அதில் தன்னார்வமுடைய இளையோரை இணைத்து மரநடுகை செயற்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கவுள்ளதாகவும், அதில் ஆர்வமுள்ள இளையோர் இணைந்து கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பிலான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

சீனாவும் இலங்கையும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான பேச்சுகளை மீண்டும் ஆரம்பித்துள்ளன.

இந்த முன்மொழிவு, கடந்த 2015 இற்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கடைசி ஆட்சிக் காலத்தில் விவாதிக்கப்பட்டது. ஆனால் அதனைத் தொடர்ந்து வந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பேச்சு இடம் பெறவில்லை.

இந்நிலையில் குறித்த பேச்சுகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் முக்கிய நோக்கம் இலங்கை ஏற்றுமதியை, சீன சந்தைக்கு அனுப்புவதாகுமென நிதியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆண்டுதோறும் சுமார் 3 70 கோடி டொலர் மதிப்புள்ள பல்வேறு தயாரிப்புகளை சீனாவிலிருந்து இறக்குமதி செய்கிறது.

அதேபோன்று இலங்கையும் ஆண்டுதோறும் 70 கோடி டொலர் மதிப்புள்ள பொருள்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு கோடி ரூபா பெறுமதியிலான கேரள கஞ்சாவுடன் மூவர் கைது



### மன்னாரில் சிக்கினர்

மன்னார், இலுப்பைக்கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பி ஆறு பகுதியில் கேரளா கஞ்சா பொதிகளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கஞ்சா பொதிகள், டிப்பர் வாகனம் ஒன்றில் மறைத்துக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவினரால் அவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையின் புலனாய்வுத் தகவலுக்கமைய மன்னார் மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராச்சியின் பணிப்பில், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக, சப் இன்ஸ்பெக்டர் திலங்க தலைமையிலான குழுவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, 89 கிலோ மற்றும் 355 கிராம் நிறையுடைய இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான கேரளா கஞ்சா பொதிகளே கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கஞ்சா கடத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனம் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளதுடன் மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் இருவர் கூமாங்குளம் பகுதியையும் மற்றையவர் தவசிகுளம் பகுதியையும் சேர்ந்த 25, 44 மற்றும் 31 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியப் பிரதேசத்தில் ரெம்டெசிவிர் மருந்தை கள்ளச்சந்தையில் விற்றவர்கள் கைது

இந்தியாவில் கொரோனா பரவல் நாளுக்குநாள் புதிய உச்சத்தைத் தொட்டு வரும் நிலையில், பல்வேறு மாநிலங்களில் கொரோனாத் தடுப்பூசிக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதற்கிடையில், கொரோனா பாதிப்புக்கு உள்ளாகி தீவிர சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உயிர்காக்கும் ரெம்டெசிவிர் மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நோயாளிகளுக்கு உயிர்காக்கும் மருந்தாகப் பயன்படும் ரெம்டெசிவிர் மருந்துக்கும் பல்வேறு மாநிலங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் ரெம்டெசிவிர் தடுப்பூசி மருந்து சட்டவிரோதமாக அதிக விலையில் கள்ளச்சந்தையில் விற்பனைசெய்யப்பட்டு வரும் செய்திகளும் தெரியவந்துள்ளன.

இந்நிலையில், மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் உள்ள மருத்துவமனையில் பணிபுரியும் ஒருவர் ரெம்டெசிவிர் தடுப்பூசிமருந்துகளை கள்ளச்சந்தையில் விற்கின்றார் என தகவல் கிடைத்ததையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரோடு தொடர்புபட்ட மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனரெனவும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடுப்பூசி மருந் துக் குப்பிகளில் சில போலியானவை என்றும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# கொரோனாத் தடுப்பு முறைகளை கடைப்பிடிக்காத நிறுவனங்கள் மீது டெல்லி அரசு வழக்குப் பதிவு!



தலைநகர் டெல்லியில் கொரோனாத் தாக்கம் உச்சமடைந்துள்ளதால் அங்கு வார இறுதி ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து டெல்லிக்கு வருபவர்கள், தமக்கு கொரோனா தொற்று இல்லை என்பதற்கான 72 மணி நேரத்துக்கு முன்பு எடுத்த 'ஆர்.டி - பி.சி.ஆர். நெகட்டிவ்' சான்றிதழைத் தம்முடன் வைத்திருக்க வேண்டும் என்று டெல்லி அரசு கடந்த வாரம் அறிவித்தது.

இந்த நிலையில், மராட்டியத்தில் இருந்து டெல்லி வந்த பயணிகளின் கொரோனா சான்றிதழை பரிசோதிக்காத நான்கு விமான நிறுவனங்கள் மீது டெல்லி அரசு வழக்குப்பதிவு செய்துள்ளது. பேரழிவு மேலாண்மைச் சட்டத்தின் கீழ் இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என டெல்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

தங்களிடம் உள்ள படுக்கைகள் குறித்து அரசின் அதிகாரப்பூர்வ செயலியில் பொய்யான தகவலை வெளியிட்ட இரண்டு தனியார் மருத்துவமனைகள் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மருத்துவமனைகள் தவறான தகவலை வெளியிட்டாலோ, படுக்கைகள் இருக்கின்றன என அரசுச் செயலியில் தகவல் வெளி யிட்டுவிட்டு கொரோனா நோயாளிகளைத் திருப்பி அனுப்பினாலோ கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் ஏற்கனவே எச்சரித்திருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

# திருப்பதி கோவிலில் 300 ரூபா டிக்கெட் பதிவு இணையத்தளம் மூலம் நாளை ஆரம்பம்

கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரிப்பால் திருப்பதி ஏழுமலையான் கோவிலில் 12 ஆம் திகதியிலிருந்து இலவச தரிசன பக்தர்களுக்கு அனுமதி ரத்துச் செய்யப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து இப்போது, பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 300 ரூபா தரிசன டிக்கெட்டுகளின் எண்ணிக்கையையும் குறைத்து, அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து தினமும் 15 ஆயிரம் பக்தர்கள் மட்டுமே சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட உள்ளனர் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

பக்தர்களுக்கான 300 ரூபா தரிசன டிக்கெட்டுக்களுக்கான பதிவுகள் நாளை முதல் திருமலை – திருப்பதி தேவஸ்தான இணையத்தளத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன. பக்தர்கள் முன்பதிவு செய்து, குறிப்பிட்ட நாளில் வந்து ஏழுமலையானை தரிசனம் செய்யலாம் என்று திருமலை – திருப்பதி தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

# அண்ணா பல்கலைக்கழக தேர்வு முறையில் மாற்றம் புத்தகங்களைப் பார்த்துப் பரீட்சை எழுதலாம்

ஒன்லைன் செமஸ்டர் தேர்வுப் பரீட்சைகளை புத்தகங்களைப் பார்த்து எழுத மாணவர்களுக்கு அண்ணா பல்கலைக்கழகம் அனுமதி வழங்கியுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. மே மாதம் நடைபெறும் செமஸ்டர் தேர்வை புதிய முறையில் நடத்தவும் அண்ணா பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனாப் பரவல் காரணமாக கடந்த ஆண்டு முதல் மாணவர்களுக்கு ஒன்லைன் மூலம் அண்ணா பல்கலைக்கழகம் தேர்வுகளை நடத்தி வருகிறது. இதுவரை மூன்று முறை ஒன்லைன் மூலம் தேர்வு நடத்தியிருந்த நிலையில், அண்மையில் வெளியான தேர்வு முடிவுகளில் 60 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள் தோல்வி அடைந்தமை கவனத்துக்கு உரியதாகியிருந்தது.

இந்த நிலையிலேயே ஒன்லைன் தேர்வில் மாற்றத்தைக் கொண்டுவர அண்ணா பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளதெனத்தகவல்வெளியிடப்பட்டுள்ளது. கொரோனாப் பாதிப்பு காரணமாக கடந்த முறை நடைபெற்ற செமஸ்டர் தேர்வுகளை பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட மென்பொருளைக் கொண்டு ஒன்லைன் வழியில் அண்ணா பல்கலைக்கழகம் நடத்தியது. பொறியியல் மாணவர்களுக்கான செமஸ்டர் தேர்வு மே மாதம் நடைபெற உள்ள நிலையில், தற்போது அந்த முறையை அண்ணா பல்கலைக் கழகம் கைவிட்டுள்ளதென தெரிகிறது.

அதற்கு மாற்றாக வரும் மே மாதத்தில் நடைபெறவுள்ள செமஸ்டர் தேர்வின்போது மாணவர்கள் புத்தகத்தைப் பார்த்து தேர்வு எழுத அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

செமஸ்டர் தேர்வில் பாடங்களில் இருந்து நேரடியாக கேள்விகளுக்குப் பதிலளிக்கக்கூடிய வகையிலும், பாடங்களைப் புரிந்து பதிலளிக்கும் வகையிலும் வினாக்கள் வழங்கப்படும் என்று அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. இந்த புதிய தேர்வு முறை, இறுதி செமஸ்டர் மாணவர்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து ஆண்டு மாணவர்களுக்கும் நடத்தப்படும் என்றும் இறுதி செமஸ்டர் மாணவர்களுக்கு மட்டும் பழைய நடைமுறையில் வினாத்தாள் இருக்கும் எனவும் அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

# சுகாதார அவசரநிலையை பிரகடனப்படுத்த காங்கிரஸ் தலைவர் கபில் சிபல் வலியுறுத்து



நாட்டில் நாளுக்குநாள் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்படும் வீதம் அதிகரித்து பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒன்றரைக் கோடியை நெருங்கியுள்ள நிலையில், தேசிய சுகாதார அவசரநிலையைப் பிரதமர் மோடி அறிவிக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவருமான கபில் சிபல் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "கொரோனாத் தொற்றில் இருந்து மீளும் வேகத்தைவிட அதன் பாதிப்பு வேகம் அதிகமாக இருக்கிறது. மோடி அவர்களே, தேசிய சுகாதார அவசரநிலையை அறிவியுங்கள். தேர்தல் ஆணையம், தேர்தல் பிரசாரங்களுக்குத் தடை விதிக்க வேண்டும். நீதிமன்றங்கள், மக்களின் உயிர்களைக் காக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகத்தில் நாளை முதல் இரவு நேர ஊரடங்கு பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து அரசு விளக்கம்

தமிழகத்தில் கொரோனா இரண்டாவது அலை தீவிரமாகப் பரவி வரும் நிலையில், பல்வேறு கட்டுப்பாடுகளை அரசு விதித்துள்ளது. அந்தக் கட்டுப்பாடுகள் கடந்த 10 ஆம் திகதி முதல் அமுலில் உள்ளன.

இதனிடையே, முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் கொரோனாப் பரவல் தடுப்பு நடவடிக்கை குறித்து நேற்று சிறப்பு ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவில், நாளை 20ஆம் திகதி முதல் தமிழகத்தில் இரவு நேர ஊரடங்கு உள்ளிட்ட கூடுதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இரவு 10.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என்றும், ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு அமல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, பஸ் இயக்கம் முற்றிலும் முடக்கப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு வதந்திகளும் பரவ ஆரம்பித்துள்ளதால், அத்தகைய வதந்திகளை நம்ப வேண்டாம் என்று தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

தமிழக அரசின் அறிவிப்பின்படி, இரவு 10.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை மட்டுமே தனியார் மற்றும் பொதுப் பஸ் போக்குவரத்து, வாடகை ஆட்டோ, டாக்ஸி மற்றும் தனியார் வாகன உபயோகம் அனுமதிக்கப்படாது. இரவு நேரங்களில் பொது ஊரடங்கு அமுலில் இருப்பதால், வெளி மாநிலம் மற்றும் மாவட்டங்களுக்கு இடையேயான பொது மற்றும் தனியார் போக்குவரத்தும் குறித்த நேரப்பகுதிக்குள் செயல்பட அனுமதிக்கப்படமாட்டாது.

அது தவிர மற்றைய நேரங்களில் மாநிலங்களுக்கு இடையேயான பொது மற்றும் தனியார் பஸ் சேவைகள் அனுமதிக்கப்படும். கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளான முகக்கவசம் அணிதல், உடல் வெப்ப நிலையைப் பரிசோதனை செய்தல், கூட்ட நெரிசலைத் தவிர்ப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளைப் பின்பற்றி போக்குவரத்து இயக்கத்துக்கு அனுமதிக்கப்படுகிறது.

எனினும், ஊரடங்கு நேரங்களிலும் அவசர மருத்துவத் தேவைகளுக்கும் விமானநிலையம் மற்றும் ரயில் நிலையம் செல்வதற்கும் வாடகை ஆட்டோ, டாக்ஸி மற்றும் தனியார் வாகன உபயோகம் அனுமதிக்கப்படும். மேலும், அத்தியாவசியப் பணிகளான பால் விநியோகம், தினசரி பத்திரிகை விநியோகம், மருத்துவமனைகள், மருத்துவ பரிசோதனைக் கூடங்கள், மருந்தகங்கள், அம்புலன்ஸ் மற்றும் அமரர் ஊர்தி சேவைகள், மருத்துவத்துறை சார்ந்த பணிகள், சரக்கு வாகனங்கள் மற்றும் எரி பொருள் காவும் வாகனங்கள் போன்றனவும் இரவு நேர ஊரடங்கின் போது அனுமதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லாலு பிரசாத் யாதவுக்கு பிணை

## மருத்துவமனையில் தொடர்ந்தும் சிகிச்சை



ஊழல் வழக்குகளில் சிறைக்குச் சென்று, தற்போது சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவுக்கு மாட்டுத்தீவன ஊழல் வழக்கில் ஜார்கண்ட் உயர் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் பிணை வழங்கப்பட்டது. இதனால் அவர் சிறையில் இருந்து இன்று விடுதலை ஆவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அவர் சிறையில் இருந்து விடுதலையானாலும் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவது தொடரும் என்றும் முழுமையாக குணமடைந்த பிறகே அவர் வீடு திரும்புவார் என்றும் அவரது குடும்பத்தினர் தெளிவுபடுத்தியுள்ளனர். இதய நோய், சிறுநீரகத் தொற்று உள்ளிட்ட பல்வேறு உடல்நலப் பாதிப்புகளுக்காக லாலு பிரசாத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு

## 3 பேர் பரிதாப சாவு

அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரம் பெருகி வருகிறது. பொலிஸாரை குறி வைத்தும், பொதுமக்கள் அதிகம் கூடும்



இடங்களிலும் தொடர் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

பெருகிவரும் துப்பாக்கி கலாசாரத்துக்கு எதிராக எதிர்ப்பு குரல்கள் வலுத்து வருகின்றன. துப்பாக்கி விநியோகத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டுமென சமூக ஆர்வலர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதையடுத்து, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் துப்பாக்கிச் சூடு சம்பவங்களை கட்டுப்படுத்த பல்வேறு நிர்வாக உத்தரவுகளை பிறப்பித்துள்ளார். ஆனாலும், துப்பாக்கி சூடு சம்பவங்கள் தொடர்கின்றன.

இந்நிலையில், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஆஸ்டின் நகரில் உள்ள வணிக வளாகம் அருகே மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் கொல்லப்பட்டனர். துப்பாக்கிச்சூடு நடத்திய மர்மநபரை தேடி வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சொந்த பிரச்சினை காரணமாக இந்த துப்பாக்கிச்சூடு நடைபெற்றிருப்பது போல தெரிகிறது எனவும், இதனால் பொது மக்களுக்கு அச்சுறுத்தல் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் குடியிருப்பு வாசிகள் குறிப்பிட்ட இடத்திற்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே கடந்த வியாழக்கிழமை இண்டியானாபோலிஸ் நகரில் உள்ள டெலிவரி நிறுவனத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 8 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வணிக வளாகத்தில் துப்பாக்கி சூடு அமெரிக்காவில் ஒருவர் உயிரிழப்பு



அமெரிக்காவில் நெப்ராஸ்கா மாகாணம் ஒமாஹா நகரில் வெஸ்ட்ரோட்ஸ் என்கிற பிரபலமான வணிக வளாகம் உள்ளது. நேற்று முன்தினம் மாலை இந்த வணிக வளாகம் வழக்கம்போல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. ஏராளமான வாடிக்கையாளர்கள் தங்களுக்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டிருந்தனர். அப்போது கையில் துப்பாக்கியுடன் வந்த மர்ம நபர் ஒருவர் அங்குள்ள ஒரு கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்த நபர்களை சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார்.

இதனால் வணிக வளாகம் முழுவதும் பெரும் பதற்றமும் பீதியும் தொற்றிக் கொண்டது. வாடிக்கையாளர்கள் அனைவரும் தங்களின் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அலறியடித்தபடி அங்கும் இங்குமாக ஓட்டம் பிடித்தனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும் ஒரு பெண் பலத்த காயமடைந்தார்.

இதனிடையே துப்பாக்கிச்சூடு குறித்து தகவல் கிடைத்ததும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். பின்னர் அவர்கள் வணிக வளாகத்தை சுற்றி வளைத்து தங்களின் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவந்தனர். ஆனால் அதற்குள் தாக்குதல் நடத்திய அந்த மர்ம நபர் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டார். அதனைத் தொடர்ந்து படுகாயமடைந்த அந்த பெண்ணை பொலிஸார் மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

தாக்குதல் நடத்திய மர்ம நபர் யார்? இந்த தாக்குதலின் பின்னணி என்ன? என்பது குறித்து பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

# மியன்மாரில் 23 ஆயிரம் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை

## இராணுவம் நடவடிக்கை

மியன்மாரில் பெப்ரவரி மாதம் முதல் திகதியில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் கவிழ்த்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது. முந்தைய ஆட்சியாளர்கள் அனைவரையும் சிறை வைத்துள்ள இராணுவம் நாட்டில் ஓராண்டுக்கு அவசர நிலையை பிரகடனப்படுத்தி உள்ளது.

இதற்கிடையில் இராணுவ ஆட்சி தொடங்கியது முதலே அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டு மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் இராணுவம் மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காமல் இரும்புக்கரம் கொண்டு இந்த போராட்டங்களை ஒடுக்கி வருகிறது. ஆனாலும் இராணுவத்தின் இந்த அடக்குமுறைக்கு மத்தியிலும் மக்களின் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது.

இந்த நிலையில் மியன்மாரின் திங்கியன் புத்தாண்டையொட்டி 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகளுக்கு இராணுவம் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளது.

இதுகுறித்து இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இராணுவ தலைவர் ஆங் ஹேலிங் 173 வெளிநாட்டவர்கள் உட்பட 23 ஆயிரத்து 47 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டுள்ளது எனவும், மேலும் பலருக்கு தண்டனை காலம் குறைக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டுள்ளது.



அதேசமயம் விடுதலை செய்யப்பட்டுள்ள 23 ஆயிரம் கைதிகளில் இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் கைது செய்யப்பட்ட ஜனநாயக ஆர்வலர்களும் அடங்குவார்களா என்கிற தகவல் வெளியாகவில்லை.

மியன்மாரை பொறுத்தவரையில் மிக முக்கியமான பொது விடுமுறைகளின்போது கைதிகள் விடுதலை செய்யப்படுவது வழக்கம்.

ஆனால் அங்கு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதற்கு பிறகு 2 ஆவது முறையாக மிகப்பெரிய எண்ணிக்கையில் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி ஒற்றுமை தினத்தின்போது சுமார் 23 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க தூதர்கள் 10 பேரை வெளியேற்றுகின்றது ரஷ்யா



அமெரிக்காவில் கடந்த ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் தலையிட்டது மற்றும் அமெரிக்க அரசுத்துறைகள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பாக ரஷ்யாவைச் சேர்ந்த 32 தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்தது.

மேலும் இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யாவை சேர்ந்த தூதரக அதிகாரிகள் 10 பேர் நாட்டை விட்டு வெளியேற அமெரிக்க அரசு உத்தரவிட்டது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவித்த ரஷ்யா இதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என எச்சரித்தது.

ஆனாலும் ரஷ்யாவுடன் மோதலை விரும்பவில்லை என்றும் அதிபர் புடினை நேரில் சந்தித்து பேசி பிரச்சினைகளுக்கு தீர்வு காண விரும்புவதாகவும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்தார்.

இந்தநிலையில் அமெரிக்காவின் பொருளாதார தடை விதிப்பு நடவடிக்கைக்கு பதிலடியாக, மாஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் பணியாற்றி வரும் தூதரக அதிகாரிகள் 10 பேரை நாட்டை விட்டு வெளியேற்றப்போவதாக ரஷ்யா கூறி உள்ளது. அவர்கள் விரைவில் ரஷ்யாவை விட்டு வெளியேறுவார்கள்.

அதுமட்டுமின்றி அமெரிக்காவைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் 8 பேரின் பெயரை தடை செய்யப்பட்டவர்களுக்கான பட்டியலில் சேர்த்துள்ளது. இதன் மூலம் இந்த 8 பேரும் ரஷ்யா வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த 8 பேரில் அமெரிக்க அட்டர்னி ஜெனரல் மெரிக் கார்லண்ட், மத்திய புலனாய்வு இயக்குநர் கிறிஸ்டோபர் வேரே மற்றும் அமெரிக்க உள்நாட்டு கொள்கை ஆலோசகர் சூசன் ரைஸ் ஆகியோரும் அடங்குவர்.

# தென்னாபிரிக்காவில் பற்றி எரியும் காடு தீயை அணைக்கும் பணிகள் தீவிரம்



தென் ஆபிரிக்காவில் பற்றி எரியும் காட்டுத் தீயை அணைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த பணியில் ஈடுபட்டுள்ள தீயணைப்பு வீரர்கள் ஹெலிக்கொப்டர் உதவியுடன் தீயை அணைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இதற்கிடையில் காட்டுத் தீயானது வேகமாகப் பரவி அருகில் இருந்த கல்லூரி கட்டடங்களுக்கும் பரவி கொளுந்து விட்டு எரிகிறது.

இதனால் கல்லூரியில் படித்த மாணவர்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்தனர். தீ விபத்து காரணமாக பல கிலோ மீற்றர் தூரத்திற்கு வானில் கரும்புகை காணப்படுகிறது.

# பயணிகள் ரயில் தடம் புரண்டு விபத்து எகிப்தில் 11 பயணிகள் உயிரிழப்பு

எகிப்தில் பயணிகள் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 11 பயணிகள் உயிரிழந்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் படுகாயம் அடைந்தனர். கெய்ரோவில் இருந்து Nile Delta நகருக்கு சென்று கொண்டிருந்த போது, Qalioubia மாகாணத்தில் இந்த விபத்து நிகழ்ந்தது.

தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு வந்த 50 அம்புலன்ஸ்கள் காயம் அடைந்த பயணிகளை மருத்துவமனைகளுக்கு ஏற்றிச் சென்றன.

விபத்து குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக எகிப்தின் ரயில்வேத் துறை தெரிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோன்பு தொடர்பாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை; மஹ்ரூப் கேள்வி

நோன்பு தொடர்பாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை தொடர்பாக 20 இற்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்களின் நிலைப்பாடு என்ன என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த சுற்றறிக்கையில் - 18 வயதுக்கு மேற்பட்டோர் மட்டுமே பள்ளிவாசல்களுக்கு செல்ல முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வயதுக் கட்டுப்பாடு எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்ற கேள்வி எழுகின்றது.

பஸ்வண்டிகளில், புகையிரதத்தில் பயணிப்போருக்கு வயதுக்கட்டுப்பாடு இல்லை. ஏனைய சமயத்தலங்களுக்கு செல்வோருக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை. பாடசாலைகள் அனைத்தும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கு கல்வி கற்போர் மிகப்பெரும்பாலோர் 18 வயதுக்கு குறைந்தவர்கள்.




நிலைமை இவ்வாறிருக்க பள்ளிவாசல்களுக்கு 18 வயதுக்கு மேற்பட்டோர் மட்டும் செல்ல முடியும் என்ற வரையறை எந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இது இலங்கை அரசியல் அமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்ட சமய ரீதியான அடிப்படை உரிமையை மீறுகின்றது.

பள்ளிவாசல்களினால் தான் கொரோனா பரவுகின்றது என்ற ஒரு மாயையை ஏற்படுத்த இதன் மூலம் முயற்சி எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. இது முஸ்லிம் சமூகம் பற்றிய மோசமான ஒரு மனப்பதிவை ஏனையோருக்கு ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகும்.

இது குறித்து 20 ஆவது திருத்த சட்ட மூலத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்களின் நிலைப்பாடு என்ன என்பதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

ஒருங்கிணைப்புத் தலைவர் பதவி, ஒருசில வேலை வாய்ப்புகள், வேறு சில தனிப்பட்ட நன்மைகள் என்பவற்றுக்காக தொடர்ந்து முஸ்லிம் சமுகத்தின் உரிமைகளை பறிகொடுத்து வரலாற்றில் இடம் பிடிக்கப்போகின்றீர்களா அல்லது முஸ்லிம் சமூகத்தின் உரிமைக்காக குரல் கொடுக்கப் போகின்றீர்களா என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

எனவே, 20 இற்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்கள் தற்போது அரசாங்கத்தின் பக்கம் உள்ளதால் இந்த விடயங்கள் குறித்து அரசாங்கத்துடன் பேச வேண்டும். முஸ்லிம்கள் உரிமைகள் தொடர்பான விடங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் குடியிருப்புகளுக்குள் திடிரெனப் புகும் முதலைகள்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ள நிலையில் அதிகளவிலான முதலைகள் வெளியேறி மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்கின்றன.

தற்போது மாவடிப்பள்ளி பாலத்தை அண்மித்த ஆற்றை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதனால் வீதியால் செல்லும் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர். குறிப்பாக காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் இரவு நேரங்களில் அதிகமான சுமார் ஒன்பது அடி வரை நீளமுடைய முதலைகள் வெளியேறுகின்றன என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இம்மாவட்டத்தில் கிட்டங்கி, மாவடிப்பள்ளி, சின்ன முகத்துவாரம் உள்ளிட்ட களப்புக்கள் போன்ற இடங்களிலும் முதலை அச்சுறுத்தல் தொடர்ந்து வருகின்றது. மேற்படி பகுதிகளில் உள்ள வாவிகள், குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது.

மேலும் தற்போது சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ளதனால் வயல் நிலங்கள், கால்வாய்கள் அண்டிய பகுதியில் நீருக்காக குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் முதலைகளினால் இரையாக்கப்படுகின்றன. இப்பகுதியில் இரவிலும் பகலிலும் வெளியேறும் இம்முதலைகளுக்கு கட்டாக்காலிகளாக இப்பகுதியில் திரியும் மாடுகளே இரையாகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி பகுதிகளில் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறது. முதலைகளின் பெருக்கம் சம்பந்தமாக உரிய இடங்களில் அறிவுறுத்தல்கள் எச்சரிக்கை இது வரையும் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

முதலை அபாயம் தெரியாமல் இப்பகுதியில் மக்கள் பயணிப்பதால் முதலையின் பிடிக்குள் அகப்படும் சாத்தியம் உள்ளது. இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

# மின்னொளி கரப்பாந்தாட்ட சுற்றுப்போட்டி

மூதூர் கிழக்கு - சந்தோசபுரம் ஒலி ஒளி விளையாட்டுக் கழகத்தின் 31 ஆம் ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக மின்னொளி கரப்பாந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த 17,18 ஆம் திகதிகளில் ஆகிய இரண்டு நாள்கள் சந்தோசபுரத்தில் விளையாட்டு கழகத்தின் தலைவர் வரதன் தலைமையில் இடம் பெற்றது.

40 கழகங்கள் கலந்து கொண்டபோட்டியில் பிரதம விருந்தினராக சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தயாரத்தினவும், சிறப்பு விருந்தினர்களாக மூதூர் பிரதேச சபை உறுப்பினர் து. ஜெகன், திருகோணமலை பசுமை நிறுவனத்தின் இணைப்பாளர் யூலின், பழங்குடி அமைப்பின் தலைவர் கனகரத்தினம், சமூக சேவைகியும் கவிஞருமான திருமதி. சி. ஜெயசிறி, ஒலி ஒளி விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகர் அ. சிறி



செல்வம், சந்தோசபுரம் பாடசாலை அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர். போட்டியில் சந்தோசபுரம் ஒலி ஒளி அணி முதலாம் இடத்தையும், சம்பூர் சிறிகனேசா இரண்டாம் இடத்தையும், இலங்கைத்துறை முகத்துவாரம் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்கள் கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# கரையாக்கன்தீவு செக்கரியா குளம் உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டது

மட்டக்களப்பு, ஏப்.19

மட்டக்களப்பு கரையாக்கன் தீவு செக்கரியா குளம் சீரமைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

கரையாக்கன்தீவு துர்க்கா இளைஞர் கழகத்தின் தலைமையில் ஏ.யூ லங்கா நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்



படுகின்ற 'இளைஞர் தலைமையில் நீர் முகாமைத்துவம்' எனும் தொனிப் பொருளில் இளைஞர்கள் தலைமையிலான சுற்றுச்சூழல் நலன்சார்ந்த அனர்த்த அபாய குறைப்பு திட்டத்தின் கீழ் கைலிமடு கிழல் கமநல அமைப்பினால் கமநல அபிவிருத்தித் திணைக்களம், மண்முனை மேற்குப் பிரதேச செயலகம், மண்முனை மேற்குப் பிரதேச சபை, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுடன், சைல் பண்ட் ஸ்ரீலங்கா, சைல் பண்ட் நியூஸ்லன்ட் மற்றும் சைல் பண்ட் கொறியா ஆகிய அமைப்புக்களின் நிதிப் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்ட முதலாவது குளமே உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

# ஒலிம்பியாட் போட்டியில் மாணவன் சாதனை

இலங்கை கணித ஒலிம்பியாட் நிறுவகத்தினால் 2018,2019 ஆம் ஆண்டுகளில் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட ஒலிம்பியாட் போட்டிகளில் தொடர்ச்சியாக பங்குபற்றி அதி விசேட சித்தி சான்றிதழ்களை பெற்றுக்கொண்டார் .

கிண்ணியா மத்திய கல்லூரி மாணவன் மஹ்ரூப் பியாஸ் அஹமட்டுக்கான சான்றிதழ்களை பாடசாலை அதிபர் எஸ்.எம்.எம். அனிபா வழங்கி வைத்துள்ளார், நிகழ்வில் பிரதி அதிபர் ஏ.எல். ஜவ்ஹர், கணித ஒலிம்பியாட் ஆசிரியர் எம்.என்.எம். சியாத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



ஜி.கே. அறக்கட்டளையின் இலவச அமரர் ஊர்தி சேவை வாகனத்தை மட்டக்களப்பு மாநகரசபை வளாகத்திலேயே தரிப்பதற்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு சமூகப் பற்றாளர்களினால் இன்றைய தினம் மட்டக்களப்பு மாநகரசபை முன்றலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஏழை மக்களின் இறுதிக் கட்டத்தில் இலவச சேவை வழங்கி வருகின்ற அமரர் ஊர்தி சேவையில் தங்களது அதிகார மோதலை வெளிப்படுத்துவதை ஆணையாளர் உடன் நிறுத்த வேண்டும் எனவும், அரசியல் பின்புலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது தடுக்கப்பட்டு மக்களின் சேவைக்காக இயங்கும் அமரர் ஊர்தி சேவை வாகனத்தை மாநகர வளாகத்திலேயே தரிப்பதற்கு எவ்வித இடையூறும் வழங்காது அனுமதியளித்து மக்களுக்கான சேவைகளைத் தொடருவதற்கு ஆவன செய்ய வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

அமரர் ஊர்தியில் அரசியல் வேண்டாம், அதிகார மோதலில் மக்கள் சேவையைத் தடுக்காதே போன்ற கோஷங்களை எழுப்பியவாறும், ஆணையாளரே ஊழியரை மிரட்டாதே, ஜி.கே அறக்கட்டளை மட்டக்களப்பிற்குத் தேவையான ஒரு சேவை, ஆணையாளரே ஏழை மக்களின் இலவச சேவையை முடக்காதே, ஆணையாளரே ஏழை மக்களின் கண்ணீருக்குப் பதில் சொல், ஆணையாளரே உமது ஆணவத்தை ஏழைமக்கள் மீது காட்டாதே, கிழக்கின் ஆளுநரே நீதியினை நிலைநாட்டு போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோர்கனின் அணித்தலைமை மோசம்

## கம்பீர் கடும் விமர்சனம்

ஐ.பி.எல். 2021 தொடரின் 10 ஆவது போட்டியில் நேற்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 204 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணி 200 ரன்களுக்கு மேல் குவித்ததற்கு கொல்கத்தா அணியின் கப்டன் ஒய்ன் மோர்கனின் முடிவுகள்தான் காரணம் என்று கௌதம் கம்பீர் கடுமையாக



விமர்சித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் வீரரும் ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணிக்காக இரண்டு தடவை சம்பியன் பட்டத்தை வென்று கொடுத்த அணித் தலைவருமான கம்பீர், நேற்றைய போட்டியில் மோர்கனின் வழிமுறைகள் மிகவும் மோசமாக இருந்தது என கடுமையாகச் சாடியுள்ளார்.

பெங்களூர் அணி துடுப்பெடுத்தாடியபோது இரண்டாவது ஓவரை வீசிய சுழல் பந்து வீச்சாளரான வருண் சக்கரவர்த்தி, அந்த ஒரே ஓவரில் விராட் கோலி, ரஜத் படிதார் ஆகிய இருவரையும் ஆட்டமிழக்கச் செய்தார். ஆனால், நான்காவது ஓவரை வருண் சக்கரவர்த்திக்குக் கொடுக்காமல் ஷகிப் அல் ஹசனுக்குக் கொடுத்தார் கப்டன் மோர்கன். இது கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியது. 'ஒரே ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்திய வருணுக்கு அடுத்த ஓவரைக் கொடுக்காமல் முட்டாள்தனமாக வேறு ஒருவருக்குக் கொடுத்துவிட்டார்' என்று கம்பீர் குறிப்பிட்டுள்ளார்.



# பில்பொ அணியை வீழ்த்தி பார்சிலோனா சம்பியனானது!

போட்டியின் ஆரம்பத்திலிருந்து பார்சிலோனா அணி தாக்குதல் ஆட்டத்தை பின்பற்றினாலும், பில்பொ அணி தடுப்பு ஆட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டதால் முதல்பாதி முழுவதும் பார்சிலோனா அணியினால் கோல் அடித்திட இயலவில்லை. முதல் பாதி ஆட்டத்தின் முடிவில் இரு அணிகளும் கோல் எதுவும் பெறாமல் இருந்தன.

இரண்டாம்பாதியில் வேகம்காட்டிய பார்சிலோனா அணி 60 ஆவது நிமிடத்தில் தனது முதல் கோலை பதிவு செய்தது. முதல் கோலை கிரீஸ்மன் அடித்தார். இரண்டே நிமிட இடைவெளியில் போட்டியின் 62 ஆவது நிமிடத்தில் டியாங் இரண்டாவது கோலை அடிக்க, பார்சிலோனா அணி 2 கோல்களால் முன்னிலை பெற்றது.

பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி ஆட்டத்தின் 68 ஆவது, 72 ஆவது நிமிடங்களில் கோல்கள் அடிக்க பார்சிலோனா அணி 4 - 0 என்ற கோல் கணக்கில் உறுதியான நிலையைப் பெற்றது. பில்பொ அணிக்கு கோல் அடிக்கும் வாய்ப்பு கிட்டவில்லை. இறுதியில் பார்சிலோனா அணி 4 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இவ்விரு அணிகளும் இறுதியாக ஸ்பானிஷ் சூப்பர் கப் இறுதிப்போட்டியில் சந்தித்திருந்தன. அந்தப் போட்டியில் பில்பொ அணி வெற்றி பெற்றிருந்தது. கடந்த கால்பந்தாட்ட சீசனில் ஒரு கோப்பையும் வெல்லாத பார்சிலோனா அணி, தற்பொழுது தங்களது முதல் சம்பியன் பட்டத்தைப் பெற்று சீசனை சிறப்பாக ஆரம்பித்துள்ளது.



# டெல்லி அணிக்கு 6 விக்கெட்டுக்களால் வெற்றி!

ஐ.பி.எல். 2021 தொடரின் பதினோராவது லீக் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 6 விக்கெட்டுக்களால் பஞ்சாப் கிங்ஸ் அணியை வென்றுள்ளது.

மும்பை மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மயாங் அகர்வால் 69 ஓட்டங்களையும் கே.எல்.ராகுல் 61 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில், கிறிஸ் வோக்ஸ், மெரிவலா, ரபாடா மற்றும் அவிஷ் கான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

196 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 18.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. ஷிகர் தவான் 92 ஓட்டங்களையும் பிரித்வி ஷா 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பஞ்சாப் அணியின் ஜெய் ரிச்சர்ட்சன் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 49 பந்துகளில் 92 ஓட்டங்களைப் பெற்ற ஷிகர் தவான் தெரிவானார்.

# தொடர்ச்சியான 3 ஆவது வெற்றியைப் பெற்றது ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி!

ஐ.பி.எல். 2021 தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 38 ஓட்டங்களால் கொல்கத்தா நைட்ரைடர்ஸைத் தோற்கடித்தது.

சென்னையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ரோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. க்ளென் மக்ஸ்வெல்லின் 78, ஏ.பி.டி.வில்லியர்ஸின் 76, தேவ்தத் படிக்கல் எடுத்த 25 ஓட்டங்களின் துணையோடு 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 204 ஓட்டங்களை அந்த அணி பெற்றுக்கொண்டது. கொல்கத்தா அணியின் வருண் சக்கரவர்த்தி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



ரோயல் சலஞ்சர்ஸ் நிர்ணயித்த வெற்றி இலக்கைத் துரத்திய கொல்கத்தா அணியால் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. அன்ட்ரே ரஸல் 31, ஒய்ன் மோர்கன் 29, ஷகிப் அல் ஹஷன் 26, ராகுல் திரிபதி 25 ஓட்டங்களைப் பெற்றனர். ரோயல் சலஞ்சர்ஸின் கைல் ஜெமிசன் 3 விக்கெட்டுக்களையும் சஹல், ஹர்சல் பட்டேல் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக 34 பந்துகளில் ஆட்டமிழக்காது 76 ஓட்டங்களை எடுத்த ஏ.பி.டி.வில்லியர்ஸ் தெரிவானார்.

# இங்கிலாந்து பிரீமியர் லீக் ஆர்சனல் - ஃபுல்ஹாம் போட்டி சமநிலை

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் பிரீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றைய தினம் போட்டியொன்றில் ஆர்சனல் அணியும் ஃபுல்ஹாம் அணியும் ஒன்றையொன்று எதிர் கொண்டிருந்தன. இந்தப் போட்டி 1 - 1 என்ற கோல் அடிப்படையில் சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

போட்டியின் 59 ஆவது நிமிடத்தில் ஃபுல்ஹாம் அணியின் ஜோஸ் மஜா முதலாவது கோலை அடித்து அணியை முன்னிலை பெற வைத்தார். அதன் பின்னர் சிறப்பான தடுப்பாட்டத்தை ஃபுல்ஹாம் வெளிப்படுத்தியதால் ஆர்சனல் அணியின் கோல் அடிக்கும் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. போட்டி முடிவடைய 2 நிமிடங்களிருக்கும்போது அடிக்கப்பட்ட கோர்னர் கிக் ஒன்றை ஃபுல்ஹாம் அணியின் கோல் காப்பாளர் அரேயொலா மிகச்சிறப்பாகத் தடுத்து தட்டிவிட, அந்தப் பந்து கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திய ஆர்சனலின் எடி கெட்டியா அதனை கோலாக்கி போட்டியை சமநிலைக்குக் கொண்டுவந்தார். இறுதியில் ஆட்டம் 1 - 1 என்ற கணக்கில் நிறைவடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# உலக வரலாற்றில் இடம் பிடித்த தியாக தீபம்

# அன்னை பூபதி

பா.அரியநேத்திரன்

தியாகி தீபம் அன்னை பூபதியின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல் நாள் இன்றாகும். ஆம் கடந்த 33, வருடங்களுக்கு முன் வடக்கு, கிழக்கில் ஓர் அந்நிய நாட்டுப் படை எம்மண்ணில் நிலை கொண்டிருந்த காலம்... இலங்கை – இந்திய ஒப்பந்தம் 1987 ஜுலை 29ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவுக்கும் இடையில் கைச் சாத்திடப்பட்டு 13ஆவது அரசமைப்பு மூலம் மாகாண சபை சட்டமூலம் அறிமுகமான காலம்... அந்தக் காலத்தில் இந்திய அமைதிப் படைகள் இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகள் எங்கும் முகாம்கள் அமைத்து அங்குள்ள தமிழ் மக்களுக்கு அமைதி என்ற போர்வையில் அட்டூழியங்களையும் செய்து வந்த காலம்... அப்படியான வேளையில்தான் அன்னை பூபதி சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவேண்டிய நிலை உருவானது.

முதலில் யார் இந்த அன்னை பூபதி என்பதைப் பார்ப்போம். இவர் மட்டக்களப்பு – அம்பாறை அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளர். 1932 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் திகதி மட்டக்களப்பில் பிறந்த பூபதித் தாயார் தனது 56 வயதில் இந்தத் தியாகத்தில் தன்னை ஈர்த்தார்.

ஆம்... விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் சண்டை நடந்து கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் இந்தியப் படைக்கு எதிராகக் குரல் கொடுக்க, அறப் போராட்டங்களை நடத்த மட்டு. – அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி முடிவு செய்தது. அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசுக்கு எதிராக உண்ணாநோன்புப் போராட்டத்தைத் தொடங்கினர்.

அந்த இரண்டு கோரிக்கைகளும் இதுதான்...

1. உடனடியாகப் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தே மட்டக்களப்பு மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் குருந்தை மரநிழலில் 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை அன்னை பூபதி ஆரம்பித்தார்.

மகாத்மா காந்தியின் அஹிம்சைப் போராட்டத்தால் விடுதலை பெற்ற பாரத நாடு என வரலாறு கூறப்படும் இந்திய நாடு அன்னை பூபதியின் அஹிம்சை வழிப் போராட்டத்தைக் கணக்கில் எடுக்கவில்லை.

போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னரே பல பேச்சுகள் இந்தியப் படை அதிகாரிகளுடன் நடத்தப்பட்டன. அன்னையர் முன்னணியின் கோரிக்கைகள் எதுவுமே இந்தியப் படையினரின் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆனால், தமிழ்ப் பெண்கள் அடையாள உண்ணாநோன்புப் போராட்டத்தில் அணிதிரண்ட நிலையில் 1988ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதி அன்னையர் முன்னணியைத் திருமலைக்குப் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. போராட்டம் தொடர்ந்து நடந்தது. 1988ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி அன்னையர் முன்னணியின் நிர்வாகக் குழுவினர் கொழும்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சில் ஈடுபட்டனர். பேச்சு முறியவே சாகும்வரை உண்ணாநோன்புப் போராட்டத்தைத் தொடங்க முடிவு எடுத்தனர்.

அன்னை பூபதி போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரே அப்போது பலர் சாகும் வரை உண்ணாநோன்புப் போராட்டத்தில் குதிப்பதற்காக முன்வந்தனர். இறுதியில் குலுக்கல் முறையில் தேர்வு இடம்பெற்றது. முதலில் அன்னம்மா டேவிட் தெரிவு செய்யப்பட்டார். 1988ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி அமிர்தகழி மாமாங்கேஸ்வர் கோயிலில் அன்னம்மாவின் உண்ணாநோன்புப் போராட்டம் தொடங்கியது. ஆனால், படையினர் உண்ணாவிரத மேடையில் இருந்தவரைக் கடத்திச் சென்றதில் அவரால் தனது போராட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை.

இந்தநிலையில்தான் பூபதியம்மாள் தனது போராட்டத்தை 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி தொடங்கினார். அவர் முன்னெச்சரிக்கையாக, 'சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கின்றேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக்கூடாது'.– எனக் கடிதம் எழுதி வைத்தார்.

இவர் பத்துப் பிள்ளைகளுக்குத் தாயார். நீர் மட்டும் அருந்தி சாகும் வரை உண்ணாநோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும் இந்திய இராணுவம் கைதுசெய்தது. ஆயினும், போராட்டம் நிறுத்தப்படவில்லை. அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று காலை 8.45 மணியளவில் அவர் உயிர் நீத்தார்.

> பூபதியம்மாள் தனது போராட்டத்தை 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி தொடங்கினார். அவர் முன்னெச்சரிக்கையாக, 'சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கின்றேன். எனக்கு சுயநினைவிழக்கும் பட்சத்தில் எனது கணவனோ அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் அனுமதிக்க முயற்சிக்கக்கூடாது'.— எனக் கடிதம் எழுதி வைத்தார்.

மட்டக்களப்பு மண்ணே கண்ணீரில் மூழ்கியது. அன்னையர் முன்னணியினர் அன்னை பூபதியின் உடலத்தைச் சூழ்ந்து ஒப்பாரி வைத்து அழுதனர்.

அவரின் திருவுடல் முகத்துவாரம் வீதியில் உள்ள சீலாமுனை விளையாட்டு மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் இருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து மலரஞ்சலி செலுத்தி வழிபட்ட வண்ணம் இருந்தனர்.

ஆனால், மக்கள் மனதில் ஓர் அச்ச உணர்வும் தென்பட்டது. இந்திய அமைதிப்படையினரின் அச்சுறுத்தலைத் தாண்டியே மக்கள் இறுதி வணக்கத்தை செலுத்தினர்.

அன்னை பூபதியின் தியாக மரணம் தமிழ் ஊடகங்களில் முதன்மைச் செய்தியாக வெளிக்கொணரப்பட்டன.

அன்னைபூபதியின் வித்துடல் 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் வரை முகத்துவார வீதி சீலாமுனை விளையாட்டு மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக மூன்று நாள்கள் தொடராக வைக்கப்பட்டது. 22ஆம் திகதி பிற்பகல் 2.15 மணியளவில் வித்துடலுக்கு ஈமக்கிரியைகள் இடம்பெற்று அலங்கரிக்கப்பட்ட வாகன ஊர்தியில் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

சர்வமதப் பெரியார்கள், பொதுமக்கள், அன்னையர் முன்னணி உறுப்பினர்கள் என பல நூற்றுக்கணக்கானோரின் அணிவகுப்பு முகத்துவார வீதி ஊடாக அரசடி சந்தி கல்முனை வீதியால் கல்லடிப்பாலத்தைக் கடந்து கடற்கரை வீதி வழியாக நாவலடியை அடைந்தது. அங்கு மாலை வேளையில் அன்னை பூபதியின் வித்துடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் மண்போட்டு இறுதி மரியாதையைச் செலுத்தினர். நாவலடியில் இன்றும் அன்னை பூபதியின் நல்லடக்க நினைவிடம் அப்படியே உள்ளது.

கடந்த 2004ஆம் திகதி டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி தாக்கத்தால் நாவலடி ஊர் முழுமையாகப் பாதிக்கப்பட்டு பல கட்டடங்கள், ஆலயங்கள், சேமக்காலை கல்லறைகள் சேதமாக்கப்பட்டபோதும் அன்னைபூபதியின் கல்லறையில் எந்தச் சேதங்களும் ஏற்படவில்லை என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தியாக தீபம் அன்னை பூபதி மறைந்து இன்று 33 ஆண்டுகள் கடந்தாலும் அவரின் தியாகம் எம்மை விட்டுப் பிரியாது. உலக வரலாற்றில் ஒரு பெண் உண்ணாநோன்பு இருந்து உயிர்த் தியாகம் செய்த வரலாறு வேறு எந்த நாட்டிலும் இல்லை. அது ஈழமணித் திருநாட்டில் மட்டக்களப்பு மண்ணில் 56 வயது நிரம்பிய தாய் தியாக தீபம் அன்னை பூபதிக்கு மட்டுமே உண்டு என்பதை அனைவரும் புரிந்துகொள்வோம்.

**எழில் கொஞ்சும் மட்டக்களப்பிலே
எதிரியின் முகத்திரை கிளித்த ஏக தலைவி
எதற்கும் அஞ்சா தாயகத் தாய் அன்னை பூபதி
என்றும் அழியாது அன்னாரின் தியாகம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகை மற்றும் நீதிமன்ற விடுமுறைக் காலங்களில் துறைமுக நகர சட்டமூலம் சமர்ப்பித்தமை சந்தேகம்


அஜித் பி பெரேரா

பண்டிகை மற்றும் தொடர் விடுமுறை காலத்தில் கொழும்பு துறைமுக நகர சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டமை சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இந்த சட்ட மூலம் அரசமைப்பிற்கு உட்பட்டுள்ளதா என்பதையே நீதிமன்றம் தீர்மானிக்கும். மாறாக கொள்கை ரீதியான விடயங்களில் அவதானம் செலுத்தப்பட மாட்டாது.

எனவே இதனை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு உட்படுத்தி அதற்கமையவே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

நீதிமன்ற விடுமுறை நாள்களை அவதானித்து திட்டமிட்ட வகையில் இந்த சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சட்டமூலமொன்றுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக பிரஜைகளுக்கு காணப்படும் அடிப்படை உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அஜித் பி பெரேரா சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிறுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

கொழும்பு துறைமுக நகர ஆணைக் குழு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட மூலம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுயாதீன குழுவொன்றை நியமித்து ஆராய்ந்துள்ளது.

அதற்கமைய குறித்த சட்ட மூலம் அரசமைப்பின் 3, 4, 12 (1) உறுப்புரைகளுக்கு முரணானது என்றும், எனவே இந்த சட்ட மூலத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைக்கவுள்ளன எனவும் சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் வெற்றியடைய வேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாகும். ஆனால் இதன் ஊடாக நாட்டுக்கு நீண்ட கால பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் அதனை அனுமதிக்க முடியாது.

அத்தோடு நீதிமன்ற விடுமுறை நாள்களை அவதானித்து திட்டமிட்ட வகையில் இந்த சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சட்டமூலமொன்றுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்காக பிரஜைகளுக்கு காணப்படும் அடிப்படை உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்தோடு ஏன் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்ற சந்தேகமும் எழுகிறது. இந்த சட்ட மூலம் அரசமைப்பின் 3 , 4 , 12 (1) உறுப்புரைகளுக்கு முரணானது என்பதோடு , அதன் 68 ஆவது உறுப்புரைக்கமைய ஆணைக் குழுவின் சட்டங்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு தண்டப்பணம் அறவிடவும், தண்டனை வழங்கவும் முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

துறைமுகநகர ஆணைக்குழு 5 - 7 உறுப்பினர்களைக் கொண்டதாகக் காணப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, அந்த உறுப்பினர்கள் இலங்கை பிரஜைகளா அல்லது வேறு நாட்டு பிரஜைகளா என்பது தொடர்பாக எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லை. எனவே எந்தவொரு பிரஜையாலும் இலங்கையர்களுக்குத் தண்டனை வழங்கக் கூடிய நிலைமை இதன் மூலம் ஏற்படும்.

அத்தோடு இந்த ஆணைக்குழுவால் உருவாக்கப்படும் சட்டங்களுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி அவசியமற்றது என்ற ஏற்பாடுகளே காணப்படுகின்றன.

வழமையாகப் பிரதேச சபைகளில் துணை சட்டங்கள் உருவாக்கப்பட்டால் கூட அதற்கு நாடாளுமன்றம் அனுமதியளிக்க வேண்டும். ஆனால் துறைமுக நகரசட்ட உருவாக்கம் இந்தநடைமுறைக்கு முரணானதாகும். ஏன் நாடாளுமன்றத்திற்கு அப்பாற்பட்டதாக இந்த சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதே தற்போதுள்ள பிரச்சினையாகும். இதனால் நாட்டுக்கு என்ன பயன்? இதன் மூலம் இலங்கையின் சட்டத்துறைக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடும்.

எனவே நாடாளுமன்றத்துக்கும் அப்பால் சட்டத்தை உருவாக்கும் நிறுவனமொன்று ஒரு நாட்டில் இயங்குமாயின் அது அரசமைப்பிற்கு முரணானதாகும்.

அவ்வாறு இந்த சட்ட மூலம் அரசமைப்பிற்கு முரணானதாகக் காணப்பட்டால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அல்லது சர்வசன வாக்கெடுப்பின் மூலமே நிறைவேற்றப்பட வேண்டும். இதன் மூலம் ஒரே நாடு , இரு சட்டம் அல்லது ஒரு நாட்டுக்குள் இரு நாடுகள் என்ற நிலைமை தோன்றியுள்ளது. 2020 இல் உருவாக்கப்பட்டுள்ள சட்ட மூலத்திலுள்ள உள்ளடக்கங்கள் ஏன் புதிய சட்ட மூலத்தில் நீக்கப்பட்டுள்ளன? இந்தச் செயற்பாட்டை நாட்டை ஆதரிக்கும் செயற்பாடாகக் கருத முடியாது.

இதற்கு எதிராக மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும் , இது அரசமைப்பிற்கு உட்பட்டதா என்பதையே நீதிமன்றம் ஆராயும். அவ்வாறில்லை என்றால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியுமா ? அல்லது சர்வசன வாக்கெடுப்பிற்கு செல்ல வேண்டுமா என்பதையே நீதிமன்றம் தீர்மானிக்கும்.

மாறாக கொள்ளை ரீதியான விடயங்களில் நீதிமன்றம் அவதானம் செலுத்தாது. அதனைத் தீர்மானிக்க வேண்டியது நாடாளுமன்றமேயாகும். இந்த சட்ட மூலத்துக்கு அமைய துறைமுக நகரில் சூது விளையாட்டுக்கு அனுமதி வழங்கக் கூடும். இது சரியானதா தவறானதா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்காது.

எனவே, நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு ஏற்ப செயற்படத் தயார் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளமையை நாட்டை நேசிக்கும் செயற்பாடாகக் கருத முடியாது. எனவே, இந்த விடயத்தை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு உட்படுத்தி அதன் ஊடாக கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கவேண்டும். இலங்கையின் வரலாற்று சம்பவங்களை நினைவில் கொண்டு செயற்படுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம். - என்றார்.




## சிலரது அரசியல் அதிகாரத்தை பலப்படுத்தவே ஈஸ்டர் குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

### ரஞ்சித் ஆண்டகை கருத்து

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டு தாக்குதல் , மதத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதல்ல, சிலரது அரசியல் அதிகாரங்களைப் பலப்படுத்திக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுதின குண்டுதாக்குதல்களின்போது உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதற்காக , பொரளை மற்றும் மாதம்பிட்டி பொது மயானத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியை நேற்று ஞாயிற்றுக்கிழமை பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை திறந்து வைத்திருந்தார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு -

மனித வாழ்க்கை என்பது மிகவும் பெறுமதி மிக்கதாகும். அதனை எந்தவொரு பொருளுடனும் ஒப்பிட்டு தாழ்த்திப் பேச முடியாது. சுயநல எண்ணங்கள் நிறைந்த உலகத்தில் மனித உயிர்கள் மிகவும் தாழ்த்தப்பட்டு மதிப்பிடப்படுகின்றன.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தின தற்கொலைக் குண்டுத் தாக்குதல், மதத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதல்ல, சிலரது அரசியல் அதிகாரங்களைப் பலப்படுத்திக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டதாகும். அதனால் மதத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெறவில்லை.

இது தொடர்பில் இலங்கையர் என்ற வகையில் நாம் வெட்கமடைய வேண்டும். எமது சுயநலத்துக்காக இன்னுமொரு மதம், இனம் மற்றும் மொழியைச் சார்ந்தவரை நாம் துன்புறுத்தியுள்ளோம்.

இந்நிலையில் தனது பலத்தைக் காண்பிப்பதற்காக இன்னுமொருவரை கொலை செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இதேவேளை ஒரு மதம், இனம் அல்லது மொழியைச் சார்ந்தவர்களுக்கு இடையூறு செய்வதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் காரணமாக முழு உலகமே அசுந்தமானதாகவே விளங்கும். அதனால், அனைவரும் தங்களது வாழ்க்கையில் மற்றுமொருவரின் வாழ்வுக்கு உதவிகளை செய்வதை வழக்கமாக்கி கொள்ள வேண்டும்.

இதேவேளை உயிர்த்தஞாயிறுதின குண்டு தாக்குதலின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

## 500 கிராம் ஹெரோயினுடன் கணவன், மனைவி கைதாகினர்

தலங்கம பொலிஸாரால் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஹீனட்டிகும்புற பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 500 கிராம் ஹெரோயினுடன் தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கைது செய்யப்பட்டவர்களில் குறித்த பெண் நோனாகம பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடையவர் என்பதோடு, அவரது கணவன் அம்பலாந்தொட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடையவராவார். குறித்த சந்தேகநபர்கள் இருவரும் ஹெரோயின் விற்பனை செய்பவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

டுபாயில் வசிக்கின்றனர் எனசந்தேகிக்கப்படும் களு சாகர மற்றும் அவருடன் வாழும் முத்து என்ற பெண் ஆகியோரே இதன் பின்னணியில் உள்ள வர்கள் என்று தெரியவந்துள்ளது. தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org